37

237

இராமாயணம்

பம்பனும் - கம்பனும்

(அண்ணாதுரை விளக்கம்)

...ஸ் பதிப்பகம்

...புரம் – திருவாரூர்.

1947.

[0-4-0.

D-,1FKA,£;
N47
97819.

நமது பதிப்பக ஏஜண்டுகள் :—

1 S. திராவிட செல்வம்,
செல்வமாளிகை, தூத்துகுடி.

2 M. பொன்னன் & கோ.,
கெடியார ஷாப், தெற்குவாசல் - ஸ்ரீரங்கம்.

3 மு. மீ. சுந்தரம், செயலாலன்,
பெரியார் இளைஞர் கழகம், திருச்சிகோட்டை.

4 S. T. பாலசுப்ரமண்யன், பவுண்டன் பெண்
ரிப்பேர், ராஜா டாக்கீஸ் பக்கம் குடந்தை.

5 T. A. பாலகிருஷ்ணன்,
வடக்குவீதி, தஞ்சாவூர்.

6 கு. கோ சதாசிவம்,
தோடித்தெரு - பட்டுக்கோட்டை.

7 த. உலகநாதன். 6. ரத்தினமுதலி தெரு,
கொண்டித்தோப்போ - சென்னை.

8 கி. பா. சந்திரன்,
பகுத்தறிவு நூல் நிலையம், திண்டுக்கல்.

9 M. இபுராஹிம் சாயபு,
கோட்டை—நாமக்கல்.

10 M. ஹமீதுசுல்தான்,
மெய் அருள், ஆடுதுரை.

11 பெ. மு. வைத்தியநாதன்,
திட்டக்குடி P. O. (தென்னார்காடு ஜில்லா)

12 E. V பெரியசாமி,
2. சகினாபாய்செள தாரவி பர்பாய் 17.

13 S. V. டேவிஸ், பெரியார் சதுக்கம்
(வழி)வள்ளியூர், உள்ளிகுளம் (திருநெல்வேலி ஜில்லா)

திராவிட நாடு திராவிடருக்கே!

2 JUL 1947

பம்ப இராமாயணம்.

(பரதன்)

கம்ப இராமாயணத்தைக் கண்டித்தது போதாதென்று, பம்ப இராமாயணம் என்று கேலிச்சித்திரமும் தீட்டுகிருயோ! உனக்கு வேறு வேலை கிடையாதோ! என்று கேட்கத்துடிக்கும் தோழர்களுக்குத் துவக்கத்திலேயே ஒரு விளக்கமளித்து விடுகிறேன். இது கேலியல்ல வேறு ஜோலியில்லாததின் விளைவு அல்ல! உண்மை உரை. கம்ப இராமாயணம் என்று ஒரு ஏடு இருப்பது போலவே, பம்ப இராமாயணமும் இருக்கிறது. முன்னதன் ஆசிரியர் கம்பன், இந்நூல் ஆசிரியர் பம்பன். முன்னவர் தமிழர் இவர் கன்னடக் கவி. இருவரும் இராம காதையைத்தீட்டினர், கதைப் போக்கு மட்டும் வேறு வேறு. ஆகவே பம்ப இராமாயணம் நமது கேலிச்சித்திரமல்ல, பழைய நூலின் மறுபதிப்பு பழுது பார்க்கப்பட்டதுமல்ல உள்ளதை உள்ளபடியே உரைத்திடுவது. ஊரில் பலருக்குத் தெரியாது என்ற ஒரு குறையை நீக்கும் நோக்குடன் வேறென்றுக்குமல்ல. பீடிகை முடிந்தது இனிகதை

இராமாயணம் என்றவுடனே பாதுகா பட்டாபிஷேகம், இலங்காதகனம், விபீஷணசரணுகதி, அனுமாரின் வால் வளருவது, அரக்கியின் மூக்கு அறுபடுவது போன்ற சம்பவங்களே நம் மக்களுக்கு நினைவிற்கு வரும் வால்மீகி வரைந்து கம்பன் கழறியதால் இராம காதையைப்பற்றி நமது மக்கள் இவைகளேயே அறிவர். ஆராய்ச்சி அதிகமில்லாததால், இராமாயணம் எத்தனை விதங்களாக உள்ளன எத்தனை ஏடுகள்

உள்ளன என்பதை யறியார், எத்தனை தூரமோ அறியேன் பண்டரிபுரம் என்ற நாதத்தையே நம்பும் நமது மக்களுக்கு, ஆராய்ச்சித்துறையிலே அனுபவம் மிகமிகக் குறைவு என்பதற்கு ஆதாரம் வேண்டுமோ!

ஆராய்ச்சி மனப்பான்மை இருக்குமானால் இராமகாதை என்பது ஆரிய ஆதிக்கத்துக்காக புனைந்துரைக்கப்பட்ட நூல் என்று கூறினவுடனே, பலருக்குக் கோபமும் வெறுப்பும் அதன் காரணமாகக் குளறலும், ஏற்பட்டிருக்க முடியாது. என் ராமனை, இரவிகுலச்சோமனை! சீதாராமனை! கோதண்டராமனை! தசரதராமனையா குறை கூறுவது! இதனை இச்செவி கேட்பதா? என்று சிலர் உண்மையிலேயே, நெஞ்சு நோயுடன் கூறிடக் கேட்டிருக்கிறேன். அவர்கள் அவ்வளவு கோபங்கொள்வதற்குக் காரணம் அவர்களின் அறியாமையல்லவா? அறிந்தோன் ஆத்திரப்படமாட்டான். அறியாதானின் ஆத்திரமோ அரை நொடியில் அடங்கிவிடும். இவ்விரண்டு வகையிலும் சேராது இடையே ஒரு கூட்டம் உண்டு. அவர்கள் சில அறிந்தவர்கள் ஆனால் தாம் அறிந்திருப்பதன்றி உலகிலே வேறு அறிவு உண்டு என்பதை அறியாதவர்கள். அறிந்தும் அறியாமலிருக்கும் அத்தோழர்களுக்குவரும் ஆத்திரம் அலைகடல்போல் கொந்தளிக்கும், வார்த்தைகளோ கடுவிஷமாகவிருக்கும், ஆனால் எனக்கு அவர்களிடம் கோபம் புறப்படுவதில்லை. காரணம் என்ன?

97819

'கண்ணா! அதோ பார் டிக்கட்பரிசோதகர் வருகிறார். அவரை ஒரு வேடிக்கை காட்டுகிறேன் பார். வண்டியிலே இருப்பவர்கள் வயிறு குலுங்கச் செய்கிறேன் கவனி. நீ மட்டும் அவன் எது கேட்டாலும் எனக்குத் தெரியாதுஎன்று சொல்லவேண்டும்.'

ஓடும் இரயிலிலே உட்கார்ந்து செல்லும் நேரத்திலே, சாய்ந்துகொண்டிருந்த சுமாரான முகவெட்டுக்காரிமுன்பு, தனது சமர்த்தைக்காட்டி அவளுடைய புன்னகையைப் பரிசாகப் பெறவிரும்பிய சதாசிவம் தன்நண்பன்கண்ணனிடம்கூறினுன்மேலேநான்தீட்டிய படி. டிக்சட் பரிசோதகருடன் ஏதோ தமாஷ்செய்யப் போகிருன் சதாசிவம் என்று கண்ணனும் கருதினுன். இருவாலிபரும் ஒருவர்பாராநேரத்தில்மற்றவராகமாறி மாறி அந்த மங்கையை கண்டுகளித்தனர். அந்த வண்டியிலே யாரும் கம்பதாசர் இல்லே. இருந்திருப்பின் கண்ணொடு கண்ணினைச் சந்தித்த காட்சியின் மாட்சியை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே அறிஞர் கூறிப் போந்தார் என்று கூறிக் களித்திருப்பர். டிக்கட் பரிசோதகர் ஒவ்வொருவரிடமும் டிக்கட் கேட்டும், பெற்றுக் கோடிட்டுக் கொடுத்தார். கண்ணனும் கொடுத்தான், பிறகு இது நடந்தது.

"சார்! டிக்கட் எடுங்கள்" இது அதிகாரத் தொனியுடன்.

"டிக்கட் வாங்கவில்லே சார்!" இது சதாசிவத்தின் மறுமொழி. கொஞ்சம் பணிவுடன்.

"வாங்கவில்லேயா? என்ன்சார்! ஏன்வாங்கவில்லே? அதிகாரி.

'வாங்கவில்லே சார் கையிலே பணமில்லே. இது போல கூறிக்கொண்டே சதாசிவம் கொஞ்சம் பயந்தவன்போல எழுந்து நின்ருன், தலேயைச்சொரிந்தான்.

"சார்! இப்படியெல்லாம் விளேயாடவேண்டாம். டிக்கட்டை எடுங்கள்." 'டிக்கட் இல்லே சார்'

'நிஜமாகவா சொல்கிறீர்'

'ஆமாம் சார்! பொய்யா சொல்கிறேன்'

'சரி! சரி! 6—3—0 கொடு'

'பணம் இல்லே சார்'

ஏய்! என்ன சுத்த வம்புக்காரனுக இருக்கிறாய் எடு பணம். ஆளைப்பார் வாட்டஞ்சாட்டமாக கிராப்பு, போலோ காலர் ஷர்ட்! எத்தனைபேர் இதுபோலக் கிளம்பினீர்கள், டிக்கட் வாங்கவில்லை, பணமுமில்லை, இங்கே பெரிய மனுஷன்போல உட்கார்ந்துகொண் டான் வா இப்படி.

என்னசார் செய்வது? கஷ்டகாலம் கையிலே காசு இல்லை.........'

கையிலே காசு இல்லாவிட்டால் போய் எங்காவது திருடுவது.

போலீஸ்காரன் உதைப்பானே சார்.

போலீஸ்காரன் மட்டுந்தானு? உன்னை மட்டும் நான் சும்மாவா விடப்போகிறேன்.

சதாசிவம் கொஞ்சமும் சிரிக்காமல் திருட்டுத் தனமாக ரயில் ஏறுபவன் எப்படி மிரளமிரள விழிப் பானே அதுபோலவே நடித்தான். கண்ணன் ஏதோ தோ கூற நினைத்தான். மறுவினாடி மௌனமாகிவிட் டான். வண்டியிலே பலபேர் பலவிதமாகப் பேசிக் கொண்டனர்.

'காலம் போறப்போக்கே பார்த்தேளா' என்றார் ஒரு கனபாடி. அவர் வெகுநேரமாக சதாசிவன் வாயிலிருந்து சுருள் சுருளாக வெளிவந்த சிகரெட் புகை நாற்றத்தால் கஷ்டப்பட்டவர்.

'கட்டாலே போறவா இப்படித்தான் ரயிலிலே ஏறிண்டு பிராணனை வாங்கிண்டிருக்கா' இது பதியை இழந்த பருவதம் (பெயர் உருவங் கண்டு வைத்தது) பேசினது.

"என்னமோ சார்! இதுபோல நமக்கும் சில சமயம் வரக்கூடும்" இது சமரச ஞானம் படைத்த சாது.

சதாசிவத்தின் கழுத்தை நோக்கிச் சென்றது டிக்கட் பரிசோதகரின் கரம். சதாசிவத்துக்கு நேத்திரானந்தமூட்டிய சுந்தரியின் முகம் சோகமடைந்தது கண்ணன் துடித்தான்.

"சார்! கையை எடுங்கோ" புதியதோர் முறுக்குடன் பேசினன் சதாசிவம். புன்னகை புரிந்தாள் பூவை. கண்ணன் களித்தான், டிக்கட் பரிசோதகர் திகைத்தார்!

ஏன் சார்! உங்கரூல் இப்படித்தானிருக்கோ?

என்ன விஷயம்? ரூல்கில் பேசறே, மரியாதையா எழுந்திரு.

மரியாதையா நீயும் நடக்கவேணும் தெரியுமோ, டிக்கட் வாங்கவில்லே யென்றால் என்ன செய்யவேண்டும் நீ? கேஸ் போடு, அவ்வளவுதானே ரூல். சட்டம் அதுதானே சார்! அதைவிட்டு விட்டுக் கழுத்திலே கை போடறியே, என்னைப்போன்ற படிச்ச பேர்வழியிடமே இவ்வளவு ஆட்டம் ஆடறியே, பட்டிக்காட்டானிடம் எவ்வளவு செய்வே!

சிலபேர் இப்படித்தான் வாய் செத்தப் பூச்சுகளண்டே கைவரிசை காட்றது' இது பருவதத்தின் பேச்சு. மனம் மாறினதால்.

என்ன யிருந்தாலும் கழுத்திலே கை வைக்கப்படாது பாருங்கோ. மனுஷாளுக்குக் கோபம் வருமென்னே, இது கனபாடி பாஷ்யம்.

ஏதோ விஷக்கடிவேளை. டிக்கட் ஆபீசரும் அப்படி ஒன்றும் தப்புத்தண்டா பேர்வழியில்லை. இந்த மனுஷ்யரும் நல்லவர்தான், இது சமரசப் பிரிய ரின் பேச்சு.

சார், நானும் ஒரு ஆபீசர்தான், ரயில்வே ஆபீசர்களின் சுபாவம் எப்படியிருக்கிறதென்று பார்க்கத்தான் டிக்கட்டில்லை என்று சொல்லி வைத் தேன். என்ன யிருந்தாலும் பொறுமை வேணும், ஆத்திரம் கூடாது.

சதாசிவம் சாவதானமாக இதனைக் கூறிக் கொண்டே சட்டைப்பைக்குள் கையை நுழைத்தான்.

"நேக்குத்தெரியுமே பாட்டி, நான் அப்பவே சொன்னேனல்லோ், அவர் டிக்கட் வைச்சிண்டே விளையாடுறார்னு. சொன்னது சரியாச்சு பார்த்தயேல் லோ" இது பர்வதத்திற்கு பாவை கூறியது. இதற் கிடையில் சதாசிவத்தின் முகம் பயத்தால் சோபிதத் தை இழந்தது, கை கால் நடுக்கமெடுத்துவிட்டது, சட்டைப் பையிலே டிக்கட் இல்லை!

'கண்ணு! டிக்கட் காணோம்' என்று கலக்கத் தோடு கூறிக்கொண்டே சதாசிவம் உள் சட்டை மேல் சட்டையாவும் தேடித் தேடிப் பார்த்தான். டிக்கட் இல்லை, பரிசோதகர் சதாசிவத்தின் படபடப் பான பேச்சாலும் பக்கபலமாகப் பிரயாணம் செய் பவர்கள் கூறினதையும் கேட்டு கொஞ்சம் அடங்கி யிருந்தாரல்லவா? சதாசிவத்தின் திகைப்பு மங்கியிரு ந்த தீயைக் கிளறிவிட்டது. சதாசிவத்தை முறைத் துப் பார்த்தபடி நின்றான். சதாசிவம் பரிதாபத்துக் குரிய உருவமானான்.

சார், டிக்கட்டைக் காணேம் சார், நிஜமா நான் விளையாடினேன் இதுவரையில். டிக்கட் வாங்கினேன், சட்டைப் பையிலே வைத்தேன். எங்கேயோ காணேம்சார்! என்று சதாசிவம் கூறினன். துக்கம் அவனுடைய பேச்சின் ராகபாவத்தையே மாற்றிவிட்டது.

'மறைவாய்ப் புதைத்த ஓடு மாயமாய் மறைந்த மாயம் யாதோ? மாமுனிவரே அறியேன்' என்றுபாக வதரின் பாடலைப் பாடிக் காட்டினர் ஒரு சங்கீதப் பிரியர். ஒரு சந்தேகப் பிரியர் கேட்டார் சதாசிவத்தை, என்னய்யாவேடிக்கை சட்டைப் பையிலேவைத்த டிக்கட் எங்கே போகுமென்று.

'கால் முளைச்சுப் போச்சு போலிருக்கு. கலியுக மேன்னே இது' என்று கூறிவிட்டுக் கனபாடி டிக்கட் பரிசோதகரைப் பார்த்து கண் சிமிட்டினர்.

ஐயா, மகாராஜ ராஜஸ்ரீ அவர்களே உம்ம டிக்கட்டைத் தயவுசெய்து கொடும். டிக்கட் பரிசோதகர் மரியாதையாக நடக்கவேண்டுமென்று சதாசிவம் கூறினதை மனதில் எண்ணி கேலியாக இதுபோல் கேட்டார்.

சார் சார்! நிஜமாகச் சொல்லுகிறேன். டிக்கட் வாங்கினேன். தொலைந்துவிட்டது.

டேய்! நீ பெரிய ஜாலக்காரன். முதலிலே டிக்கட் இல்லையென்று சொல்லி, பிறகு நான் கண்டிச்சு கேட்டதும் டிக்கட் இருக்குன்னு நியாயம் பேசி, இப்ப டிக்கெட் தொலஞ்சு போச்சினு ஏமாற்றவா பார்க்கிறே!

இம்முறை டிக்கட் பரிசோதகரின் கை சதாசிவத்தின் கழுத்திலே அதிவேகமாகப் பாய்ந்தது.

'கண்ணு! சொல்லு சொல்லப்பா' சதாசிவத்தின் வேண்டுகோள் இது.

எனக்கொன்றும் தெரியாதே!" இது கண்ணன், சதாசிவத்தின் பாடத்தின்படி சொன்ன பதில்.

ஸ்டேஷன்! இரயில் நின்றது. சதாசிவம் டிக்கட் பரிசோதகரால் கீழே இறக்கப்பட்டார். கண்ணன் இறங்கித் தீரவேண்டி நேரிட்டது. சிறு கூட்டம் கூடி விட்டது. பெருங்கூச்சல் வண்டி புறப்பட்டுவிட்டது வாலிப விருந்தினுல் வகைகெட்ட செயல்புரிந்த சதாசிவம் ரயிலடியிலே ரகளேயிலே 'சிக்கிஞன்.' அவன் வாங்கியிருந்த டிக்கட் கை குட்டையிலே சிக்கி சாலடியிலே நெடுநேரம் இருந்து பிறகு கைப்பற்றுவாரில்லாததால் பெஞ்சிக்கடியிலே கிடந்தது.

சதாசிவன், டிக்கட் வைத்துக்கொண்டே டிக்கட் வாங்காதவன் போல நடித்து வேடிக்கை செய்ய தொடங்க கடைசியில் டிக்கட் வாங்கியிருந்தும், வாங்காதவன் அனுபவிக்கவேண்டிய அவதியடைய நேரிட்டது காரணம் அவனறிந்தும் அறியாதவர் கூட்டத்திலே ஒருவன். டிக்கட் வைத்துக்கொண்டே வேடிக்கை செய்கிறதாக அறிந்திருந்தான். ஆனல் கை தவறி கீழே டிக்கட் விழுந்துவிட்டதை அவனறியவில்லே. சதாசிவம் ஓடும் ரயிலில் மட்டுமல்ல; எங்குமிருக்கிறுன். ஒருவனல்ல! இந் நாட்டிலே பத்திலே ஏழு இந்தப் பேர்வழிதான். இவ்விதம் அறிந்தும் அறியாமலிருக்கும் அன்பர்கள்தான் ராமாயணம்போன்ற காவியங்களை ஆராய்ந்துரைப்பவர்மீது சீறுகின்றனர்.

அவர்களுக்குத் தெரிந்த இராமன் ஒருவன்! தேவன், அவதாரம், அரியம்சம்! இராமனைப்பற்றி அவர்கள் அறிந்ததுதான். அறிவு என்பது அவர்தம் எண்ணம், அவர்கள் அறியவேண்டும் இராமனைப்பற்றி, வேறு பலர் வேறு வேறுவிதமாகவும் அறிந்திருக்கிறார்கள் என்பதை பம்ப இராமாயணம் அவர்களுக்கு இந்த புத்தறிவைத் தரும் என்று நம்புகிறேன்.

வளர்ந்த பீடிகையும் முடிந்தது. இனிக் கேளுங் கள் கதையை. வால்மீகியும் கம்பனும் இராவணனை அரக்கனாக்ச் சித்தரித்து இராமனைத் தெய்வமாக்கி அனுமானை அடியவனாக்கி சீதையைச் சீதேவியாக்கி, விபீஷணனை ஆழ்வாராக்கி, இராமாயணத்தைப் பாரா யணப் புண்ணியக் கதையாக்கி வைத்தனர். கோயி லிலே கொட்டுமுழக்கும், ஆரியத்துக்கு ஆதரவும் அதன்பயனாக இன்றும் நடந்தபடி இருக்கக் காண்கி றோம். பம்ப இராமாயணம் அதுபோன்றதல்ல. மண்டோதரி மணாளன் இராவணன், ஓர் மாவீரன்! மட்டற்ற மகிழ்ச்சியுடன் இலங்காதிபதியாக யிருக்கி றான். விபீஷணன் அவனுக்கு வாஞ்சையுள்ள தம்பி காட்டிக்கொடுத்து காகுத்தனிடம் கைக்கூலி பெறுப வனல்ல. பம்பன் முதலில் சித்தரித்தல், விபீஷணன் அண்ணனின் உயிர்காத்திட அரும்பணிபுரியும் ஆண் மையாளன். இராவணனுக்கு ஓர் சகோதரி. பெயர் சூர்ப்பனகையல்ல! சந்திரவதி! இராம இலட்சுமணரி டம் மோகங்கொண்டு காட்டிலே காமவல்லியாகத் திரி ந்து அங்கம் அறுபட்ட அணங்கல்ல, பாதாள இலங் கையென்ற இடத்தின் அரசராம் கரன் என்பானின் பட்டமகிஷி! சம்புகன், அவள் குமாரன்!

பம்ப இராமாயணத்திலே இராவணனின் குடும் பம், ஒற்றுமையும், வாஞ்சையும், வீரமும், எழிலும்;

செல்வமும், சீரும் சிறந்ததாகச் சித்தரிக்கப்பட்டிருக்கிறதேயன்றி, கம்ப சித்திரம்போல் கண் மண் தெரியாது ஆடிய அண்ணன், காமம் பிடித்தலைந்த தங்கை, காட்டிக்கொடுக்கும் தம்பி என்ற முறையிலேயில்லை. இந்த மாறுபாட்டினை மனமாச்சரியம்கொண்டு மதியை மறக்கும் அன்பர்கள் மனதிலே பதியவைத்துக் கொள்ளவேண்டும். இராவணனை அரக்கனாகச் சித்தரித்து அவன் குடும்பத்திலே துரோகியும் தூர்த்தையும் உடன் பிறப்பாளர்களாக்கி காட்டியது வால்மீகியின் கருத்தோடுகூடிய கற்பனை. ஆரிய ஏகாதிபத்தியத்திற்கு ஆண்டவனின் ஆசியிருப்பதாக 'விசுவாசிகளுக்கு' கூற வரைந்த ஏடு அது. எனவே இலங்காதிபதியின் குடும்பக்காட்சி, அக் கருத்தினுக்கு ஏற்ற வகையிலே சித்தரிக்கவேண்டியது வால்மீகியின் கடமையாகிவிட்டது. ஆரிய நூலை ஆதாரமாகக்கொண்டு அரிதாசராகவேண்டிக் கம்பன் ஏடு எழுதியதால் ஆரியக் கவியின் அடிச்சுவட்டை அழகாக இங்கே பின்பற்றினன். தத்தமது கொள்கைகளை நிலைநாட்டவும் பிரச்சாரம் செய்யவும் ஏடுகளை எழுதுவர் என்பதை அறியாமல் கம்பன் கூறினன். கவர்ச்சிமிக்க கவிதைகளால் ஆகவே அக் கதை அவன் கூறியதைப்போலத் தான் இருந்துதிரும் என்று நம்புவது பாமரரின் செயல். பண்டிதர்களோ இத்தகைய பண்ணைகளிலே மேய்ந்து தீரவேண்டியவர்களாகிவிட்டனர், பம்பன் ஆரியத்திற்காககதைஎழுதவேண்டிய அவசியமற்றவன் எனவே இராவணனை கேவலப்படுத்த வேண்டிய நிலையிலில்லை. கம்பனின் ஏட்டிலே காதகனாகக் காட்டப்படும் இராவணன் பம்பனின் பாவிலே வேறு உருவாக்கப்படுவதை உணரும் அறிவாளிகள் கதை கற்பனை என்பதையும் அக்கதையினைக் கையாண்டவர்கள் தத்தம் கருத்தினை வலியுறுத்த அக்கதையை கருவியாகக்கொண்டனர் என்பதையும் அறிவர். அறிந்தோர்

அத்தகைய கற்பனையை நிறுத்து, உரைத்து, ஆராய்ந்து தள்ள வேண்டுவனவற்றைத் தள்ளி, கொள்ளவேண்டுவனவற்றை கொண்டு பயன்பெறுவர், இம் முறை தெரியாதவர் இராம நாமமே கற்கண்டு என்று கூறுவர் ஆராய்ச்சியாளர்மீது கற்குண்டுகளை வீசி மகிழ்வர்.

கம்பன் வால்மீகியை ஆதாரமாகக் கொண்டு இராமாயணம் எழுதினான். பம்பன் கிண்டலுக்காக அந்த இராமாயணத்தையே வேறு விதமாக எழுதினான்போலும், பம்பன் பழங்காலத்து சு. ம. போலும் என்ற முடிவுக்கு இதற்குள்ளாகவே சில வேகவிவேகிகள் வந்து விட்டிருப்பார். அவர்கள் உணரற்றோர் விளக்கம் இதோ.

97819

கம்பனுக்கு வால்மீகியின் ஏடு மூலம். அது போல பம்பனுக்கும் ஒரு மூல நூல் உண்டு. பம்பனும் கம்பனைப்போல ஒரு மூலத்தைத் தழுவியே நூல் எழுதினான். ஆரியர்களுக்கு வால்மீகி எவ்வளவுசிரேஷ்டமானவரோ அவ்வளவு சிரேஷ்டமானவராகவே ஜைனர்களால் போற்றப்படும் ரவிசேனர் என்பவரின் ராம சரிதத்தை முதல் நூலாகக் கொண்டதுதான் பம்ப இராமாயணம், வால்மீகி ஆரியத்தை வாழ வைக்க வரைந்தார் இராமகாதை, அந்த நோக்கத்திற் சேற்றவிதத்தில், ரவிசேனர் என்ற ஜைன பெரியோர் அவ்விதமான ஆதிக்கக் கருத்தேதுமின்றித் தீட்டினர் இராம காதை. அதனைத்தழுவி எழுதினான் பம்பன். எனவே இராவணனை இழிவு செய்யவில்லை; இரக்கம் என்ற ஒருபொருளற்ற அரக்கனாக்கவில்லை. இருபது திண்தோள்கொண்டு ல[illegible]னமீது இச்சை கொண்டு காமுகனாகக் கெட்டலைந்தவனாக்கவில்லை. இதுவரை வால்மீகியாலும் கம்பனாலும் படம் பிடிக்கப்பட்ட இராவணனைக் கண்டறிந்தவர்கள் ரவிசேனர் காட்ட,

பப்பன் தீட்ட, வெளிப்படும் இலங்கை வேந்தனை இனி காணட்டும் கருத்துடன். இனி இலங்காதிபதி யின் கொலுமண்டபம் செல்வோம்.

இலங்காதிபதி கொலுவீற்றிருக்கிறான். அங்கே கம்பன் காட்டியதுபோல கனல் கக்கும் கண்ணுடையோரும், கோரப்பற்களுடையோரும் கொடியோருமில்லை. ஒரு வல்லமை மிக்க மன்னன் அவை இருக்க வேண்டிய முறைப்படியே காட்சியிருக்கிறது, பக்தியால் மிகுந்து பரிபக்குவத்தில் சிறந்து, பகவத் சேவை செய்யும் சிந்தையில் உயர்ந்து அறநெறியறிந்து அண்ணனைத் தடுத்து ஆட்கொள்ளும் அண்ணலாகவும் சீதை எனும் பெருநெருப்பைக் கொண்டான். அண்ணன் இனி நில்லேன் அவன் முன்னம் என்று கூறிச் சரணுதிகதியடைந்த ஆழ்வாராகவும் விபீஷணன் இல்லை. ஆற்றலுள்ள அரசனுக்கு விபீஷணன் அன்புள்ள தம்பியாகவே இருக்கிறான். மண்டோதரி கொலுவிலே, மந்திரிப்பிரதானியர் கொலுவிலே!! அந்த வேளையிலே, வந்து சேருகிறான் ஒரு ஜோதிடன்,

இலங்காதிபதியே! உன் இராஜ்யத்துக்கும், உனக்கும் அயோத்தி மன்னன் மகனாலும் மிதிலை மன்னன் மகளாலும் ஆபத்து வரப்போகிறது, என்று ஜோதிடன் கூறுகிறான்.

எனக்கு ஆபத்துவிளைவிக்கக்கூடிய குமரன் குமரி யாவர்? பெயர் வன்ன? எங்கு உளர்? மன்னன் இதுபோலக்கேட்க ஜோதிடன் கூறுகிறான். அவர்கள் இனிபிறந்து வளர்ந்து பின்னரே உனக்கு பேராபத்து விளைவிக்கப்போகிறார்கள்.

இலங்காதிபதி சிரித்திருப்பான், கொலுவிலே இருந்தோர் நகைத்திருப்பர் விபீஷணனே என் அண்ணனுக்கு ஆபத்தைத்தர ஒரு அணங்கும், ஓர் ஆண் மகனும், மகன் அயோத்தியிலும், மகள் மிதிலையிலுமா பிறக்கப்போகிறார்கள்? பிறந்தன்றோ பேராபத்து! பிறவாமலே செய்தால் ஏன்! எந்த அயோத்தி மன்னனுக்கு காளை பிறந்து என் அண்ணனுக்கு கேடு செய்யப்போகிறான் என்று கூறுகிறாயோ, அந்த மன்னனையே கொன்றுவிடுகிறேன். மன்னன் மாண்டால் மகன் ஏது? இலங்கையின் மண்டலாதிபதிக்கு ஆபத்தேது. அதுபோலவே மிதிலையிலும் பிணம் வீழச்செய்வேன், என்று விபீஷணன் கூறினான். ஜோதிடன் வந்தபோது அயோத்தி மன்னனுக்கும் மிதிலை அரசனுக்கும் குழந்தைகள் இல்லை, திருமணமே நடக்கவில்லை!

இங்ஙனம் அண்ணனுக்கு உதவியாக தம்பி கிளம்பவே, நாரதர் நுழைகிறார். கதையில் எல்லாக் கதைகளிலும் வருவது போலவே!

திரிலோக சஞ்சாரியே! அடியேனைக்காண வந்தது என் பாக்கியமே!

என்னமோ அப்பா தசரதா! உன்னை கண்டு போகவேண்டுமென்று ஆவலோடு ஓடி வந்தேன். உன்னை மறுபடியும் நான்காணப்போகிறேனா? எனக்கு அந்தப் பாக்கியம் இல்லை.

சுவாமி! மகரிஷியே! இது என்ன கர்ண கடூரமான வார்த்தை.

ராஜன் தசரதன் மாண்டான் என்று கேள்விப்

படும்பொழுது இதைவிட கர்ண கடூரமாகவன்றோ இருக்கும், அதை நினைத்தே நான் இப்போது ஆயாசப்படுகிறேன்.

நாரதரே! என்ன வார்த்தை பேசுகிறீர்!

மன்னா! உன்னை நான் கடைசி முறையாகத்தான் காண்கிறேன்.

ஏன்! தங்களுக்கு என்ன விபத்து நேரிடப் போகிறது? மீண்டும் அயோத்தி வரமாட்டீரா?

அயோத்திக்கு வருவேன், ஆனால் நீ இருக்க மாட்டாயே மன்னா.

என்ன! ..என்ன!

தசரதா! நான் எப்படிச் சொல்வேன், எனக்கு நெஞ்சை அடைக்குதே!

சொல்லுங்கள் சாமி! என்மனம்குழம்பிவிட்டது.

மன்னா! உன்னைக் கொல்ல..............

எவன் சுவாமி கிளம்புகிறான், இந்திரனா? சந்திரனா? யார் கூறுங்கள்?

அவர்களல்லவே! அவர்கள் யாராவதுகிளம்பினால் நானே தடுத்திருப்பேனே இலங்காதிபதியின தம்பிவீர விபீஷ்ணான் வருகிறான், உன்னைக்கொல்ல. உனக்கு ஒருமகன் பிறந்து இராவணனைக்கொல்வான் என்று ஜோதிடன் கூறினனும், அண்ணனைக் காப்பாற்ற விபீஷனான் உன்னைக்கொல்ல வருகிறான்.

பம்ப இராமாடணத்தை நாடகமாக நடத்தப் பகுத்தறிவு நாடகசபையொன்று கிளம்பினால், தசரத

ருக்கும் நாரதருக்கும் இதுபோல உரையாடல் நடந்ததாகக் காட்சியிருக்கும் ஏனெனில் நாரதர், தசரதனுக்கும் ஜனகனுக்கும் விபீஷணனின் சபதத்தைக் கூறிவிடுகிறார். கூறியதோடு தப்பித்துக்கொள்ள உபாயமும் சொல்லித்தருகிறார். அதன்படி தசரதனும் ஜனகனும் தத்தம் அரண்மனையிலே, தத்ரூபமான பிரதிமைகளை அமைத்துவிட்டு மாறுவேட மணிந்து கொண்டு தேசாந்திரம் போய்விடுகின்றனர் விபீஷணன் பிரதிமைகளை அழித்துவிட்டு தசரதனும் ஜனகனும் இறந்துவிட்டதாக எண்ணிக்கொண்டு இலங்கை போய்ச்சேருகிறான் என்பது பம்ப இராமாயணம்.

தசரதன் மாறுவேடமணிந்து நாடு பல சுற்றும் போது, கண்டக மங்கலபுரம் என்ற இடத்திலே, கைகேயின் சுயம்வரம் நடைபெற, அங்குசென்று, அவள் மனதைக் கொள்ளைகொண்டான். மாலை வீசினாள் மங்கை வாளை வீசினர் சுயம்வரத்திற்கு வந்திருந்த வேந்தர்கள். கலியாண மண்டபம் களமாயிற்று. மாப்பிள்ளை மாவீரனுன். மனையாள் சாரதியானாள் வெற்றி தசரதனுக்குக் கிடைத்தது. வேள்விழியாளின் வீரத்தாலேயே வெற்றிபெற்றதால் தசரதன் மனம் பூரித்துக் கைகேயிக்கு வரம்தர வனிதை வேண்டும் போதுபெற்றுக்கொள்கிறேன். என்ற நிபந்தனையுடன் வரத்தை ஏற்றுக்கொண்டு 'வதுவை'யை முடித்துக் கொள்கிறார். தசரதன் கைகேயியுடன் அயோத்தி திரும்பி அரசோச்சுகிறான். வேறுபல அழகிகளையும் மணம் செய்துகொள்கிறான். இராம, இலட்சுமண, பரத, சத்ருக்னர்கள் பிறக்கின்றனர்.

நாடோடியாகச் சென்ற ஜனகனும், சில காலம் சென்று மிதிலையை அடைந்து அங்கு விதேகி என்னும் பாவையை மணம் புரிந்து கொள்கிறான். ஜனக

னுக்கு சீதை எனும் பெண்ணும் பிரபாமண்டலன் எனும் மகனும் பிறக்கின்றனர் இரட்டைக் குழந்தைகளாக. மிதிலையிலே ஜானகியும் உடன் பிறந்த பிரபாமண்டலனும் தொட்டிலிலே இருக்கட்டும். வேறோர் மண்டலத்துக்கு வாரீர்.

இரத்நூபுர சக்கரவாளபுரம், என்றோர் மண்டலம் அம்மண்டலாதிபதிக்கு குழந்தைப்பேறு இல்லை. பட்டகடனுக்கு மட்டுமே வாரிசு ஆகவேண்டிய நிலையிலே உள்ளவருங்கூடப் புத்திரனில்லா சோகத்தால் பீடிக்கப்படுகிறார்களே. நீண்ட பெட்டரையுடைய மண்டலத்தின் அதிபனுக்குக் குழந்தை யில்லையென்றால் சோகம் இராமற் போகுமா? மன்னனின் மனம் உலைக்கூடமாகிவிட்டது. விசாரத்தைப் போக்க நினைத்தான் வித்யாதரன் ஒருவன். வித்யாதரர் இறக்கையில்லா விமானங்கள். பறந்துசெல்வர்! வித்யாதரன் ஒருநாள் மிதிலைக்குச் சென்றான் ஆகாய மார்க்கமாக!

இதற்கிடையிலே தொட்டில் குழந்தைகள் வளர்ந்து, நடமாடும் நட்சத்திரங்களாகி (நடிக்கும் நட்சத்திரங்களல்ல) மிதுலையிலே நந்தவனத்திலே விளையாடிக்கொண்டிருந்தன. வித்யாதரன் பிரபாமண்டலனைத் தூக்கிக்கொண்டான். ககன மார்க்கமாகச் சென்றான். குழந்தையை இரதநூபுரத்தில் சேர்த்தான். வந்தவேலை முடிந்ததென சொந்த இடம் சென்றான். சோகித்திருந்த மன்னன் ஆனந்தக் கூத்தாடினான். அட என் கண்ணே, மணியே, சற்கண்டே என குழந்தையைக் கொஞ்சினான் பிரபாமண்டலன் இரதநூபுர இளவரசனானான். மிதிலை மன்னனின் மகன் போரிடாமலே ஒரு இராஜ்ஜியத்தைப் பெற்றான். பெற்றமகனை இழந்தோமே யென்ற பெருங் கவலையிலே மூழ்கினான்; ஜனகன். கவலையில் மூழ்கிய நேரத்திலே கிராதகர்கள்

என்ற கூட்டம் போர்முரசு கொட்டிய சத்தம் கேட்டான், சித்தம் குழம்பினான். படையெடுத்து வந்தவரோடு போரிடக்கிளம்பினான். போரிலே துணை வேண்டி தசரதனுக்கு தூதனுப்பினான் இராமனும், இலட்சுமணனும் மிதிலைக்கு வந்திருந்து கிராதகர்களை வென்று ஜனகனுக்கு உதவி செய்தனர்.

சிதை சிறுமியாகயிருந்த காலம்போய், சிங்காரியான காலமது. சிங்கமெனப் போரிட்ட இராமனுக்குச் சிதைமீது வேறென்ன உண்டாகும்? காதல் போரிலே இவனே புலி, பூங்கொடிக்கேற்றவனே என்று ஜனகன் தீர்மானித்தான். சிதையை இராமனுக்கு மணமுடிக்க இசைந்தான். ஜெயமங்கலம் பாடிவிடாதீர்கள். கதை வளருகிறது. நாரதர் வருகிறார்.

பிரபாமண்டலன் இரதநூபுரத்திலே தோட்டத்திலே உலவிக்கொண்டு வழக்கமாக கண்டமலர்களைக் கண்டு சலித்திருக்கும் நேரம் ஒரு சித்திரம் தீட்டப்பட்ட பொருளைக் காண்கிறான். மலர் அல்ல மலர் முகவதி, பிறகு என்ன நடக்கும்? தெரிந்ததுதானே. நான் விரும்பும் பகுத்தறிவுக் கழகம் இக் காட்சியிலே பிரபாமண்டலனை என்ன பேசவைக்கும்!

காவியத்திலும் காணக் கிடைக்காத கட்டழகி! நீ ஓவியந்தானா உண்மையா? சித்திரமே! சிந்தனையைச் சுழலச்செய்யும் யந்திரமே! நீ யார்! எங்காட்டு நங்கை! எவன் குமாரி? என்று பிரபா மண்டலன் காதல் மொழிபேசி கானம்பாடிக் களினடனமாடி, "இவளையன்றி வேறொருவளை மணம் புரியேன். இவள் எனக்கு இல்லையேல் நான் பிணமாவேன்" காதல் காதல் காதலின்றேல் சாதல் என்று பேசுவான்!

பிரபா மண்டலன் சித்திரத்தைக் கண்டு காதல் கொண்ட செய்திகேட்டான் மன்னன், என் மகனின்

மனத்தைக் கவர்ந்த மங்கை எங்கிருப்பினும் எனக்கே மருமகளாகக் கடவள், என்று தீர்மானித்தான்! அவனும் அறியான். மகனுக்கும் தெரியாது. சித்திரத்தை தீட்டி சிங்காரத் தோட்டத்திலே வீசி விட்டு ஆசையைக் கிளறிவிட்டவர் நாரதர் என்பதை! அது நீங்கள் அறிவீர்களா, பிரபாமண்டலன் உள்ளத்திலே காதலை அமோகமாகக் கிளறிவிட்ட அந்தச் சித்திரம் எந்தச் சிற்றிடையாளுடைய உருவம் என்பதை சித்திரம் சீதையின் உருவம் தங்கையினடமே அண்ணன் காதல் கொண்டான், சீதையின் உருவமே உள்ளத்திலே ஊன்றிவிட்டதால் காதல்பித்தம் கொண்டுவிட்டான் பிரபாமண்டலன். அவனறியான் சீதை தன் உடன்பிறந்தாளென்பதை தொட்டிலிலே இருவரும் குழந்தைகளாக ஒன்றாகத் துயின்றசேதி தெரிந்திருந்தால் பிரபாமண்டலன் சீதையை படுக்கையறையிலே பிரியையாக்கிக்கொள்ளச் சம்மதியான். தங்கப்பதுமை போன்றவள் என்பது தெரிந்தது. தங்கை என்பதை அறியவில்லை. காதலுக்குத்தான் கண் இல்லையாமே.

"ஜனக மகாராஜரே வாரும், வாரும்"

வேந்தரே இவ்வளவு அவசரமாக எம்மை வரவழைத்த காரணம் யாதோ?

காரணமுண்டு சொன்னால் நீர் களிப்படைவீர்!

பரமசந்தோஷம், விஷயம் என்ன?

ஜனகமகாராஜரே, என் அரண்மனைக்கு ஒரு தீபம் வேண்டும்.

'தீபமா?'

ஆமாம் ஒரு திருவிளக்குத் தேவை.

விசித்திரமாக இருக்கிறது. விளக்கு என்றால் விளங்கவில்லையே.

விளங்க வைக்கிறேன், குடும்ப விளக்கு எது?

குலஸ்திரீ, பத்னி.

விவேகி நீர், பத்னிதான், ஆம் அரண்மனைக்கு அழகு தீபம் வேண்டும். பிரபாமண்டலனுக்கு மனைவியாகவரும் பாக்கியசாலிதானே, என் அரண்மனைக்குத் திருவிளக்கு.

ஆம் அரசே உண்மைதான்.

மிதிலையின் மணியென விளங்கும் சீதையை என் அரண்மனைக்குத் திருவிளக்காகத் தருமாறு.........."

மன்னு என்ன செய்வேன், சீதையை......
......................."

எப்படி பிரிந்துவாழமுடியும் என்று கவலைப்படாதீர். அங்கு ஆறுமாதம் இங்கு ஆறுமாதமாக இருக்கலாம் சீதை.

அல்ல அல்ல! நான் சொல்லவந்தது அதுவல்ல.

சீதையைத் திருமணம் செய்துகொள்ளும் நோக்கம் பிரபாமண்டலனுக்கு உண்டோ இல்லையோ என்று யோசிக்கிறீரா? மகன் சம்மதித்தபிறகே நான் உம்மை அழைத்தேன்.

மன்னு! மன்னிக்கவேண்டும், சீதையை நான் வேறொருவருக்குத் தருவதாக வாக்களித்துவிட்டேன்.

வாக்களித்தீர் என் நோக்கம் அறியாமுன்பு இப்போது வாக்கை எனக்கு அளியும், போக்கை மாற்றிக்கொள்ளத் தெரியாதார் புவியாளும் முறை அறியாதாரே என்பதை தாம் தெரியாதவரல்லவே.

சீதையை இராமனுக்குத்தர ஏற்பாடாகிவிட்டது.

எத்தனையோ ஏற்பாடுகளிலே மாறுபாடுகள் நேரிடுகின்றன.

இராமன் எனக்குப் பேராபத்து நேரிட்டபோது உதவி செய்தான்.

சீதையைப் பரிசாகப் பெறவா? ஜனகா! மன்னர்கள் தங்கள் மகளைப் பரிசுப் பொருளாகக் கருதுவது இழுக்கு, வழக்கமுமல்ல.

சீதையை அவன் காணுமுன்பே களம்புகுந்தான் எனக்காக.

சீதையைக் காணுமுன்பே பிரபாமண்டலன், காதற்கனலிலே புகுந்துவிட்டான்.

குற்றம்.................

பருவத்தின்பாற்பட்டது. பல பேசல்பயனில்லை. மன்னா! உமது மகளை என் மகனுக்குத் தர இசைவீரா இல்லையா? என்பந்தத்துவம் வேண்டுமா? பகைவேண்டுமா?

ஒரு புறம் கருநாகம், மற்றோர் புறம் படுகுழி என்றால் என் செய்வது?

புத்தியுள்ளவன் கருநாகத்தை படுகுழியிலே தள்ளுவான்

அரசே என்னால் சொன்ன சொல்லை மாற்ற முடியாது காரணமின்றி.

பிரபாமண்டலனின் பிரேமை என் கோபத்தைப் பெட்டிப் பாம்பாக்கி விட்டது. சரி ஜனகரே! நீர் வியந்து கூறும் அந்த வீரன் எம்மிடமிருக்கும் ஒருவித்யாதர 'வில்லை' உடைத்து விடுகிறானா என்றோர் பரீட்சை ஏற்படுத்துவோம், வில்லை முறித்தால் சீதை இராமனுக்கு.

வேந்தரின் விருப்பப்படி!

இந்தக் காட்சியும் நடந்த பிறகுவில் முறிக்கும் காட்சி நடந்து, சீதையை இராமன் திருமணம் செய்து கொள்ளும் காட்சி நடக்கும், நடத்தினால் பம்பன் இப்போக்கிலேதான் கதை தீட்டியிருக்கிறான்.

சீதையும் இராமனும் சதிபதியாகி அயோத்தி

சென்று அகமகிழ்ந்திருக்கும் சமயத்திலே, இராமனுக்கு முடி சூட்டத் தசரதன் தீர்மானிக்க, கைகேயி தன் மகன் பரதனுக்கு நாடும், ராமனுக்கு காடும என்று வரம் கேட்டுப்பெற, ராமன்; இலட்சுமணன், சீதை ஆகியோருடன் ஆரண்யவாசம் செய்கிறான், பாதாள இலங்கையிலே இராவணனின் தங்கை சுந்தராவுக்கு மகன் சம்புகனென்று கூறினோமே அவன் மாயவாளொன்றை பெறுவதற்காக கடுந்தவமிருக்கிறான், பனிரண்டு ஆண்டுகளாக, ஆரண்யம் சென்ற இலட்சுமணன் சம்புகனைக்கொன்றுவிட்டு மாயவாளை அபகரித்துக்கொள்ளுகிறான்.

மகனைக்கொன்றவுடன் போரிடுகிறான் தந்தை கரன். அவனுக்கு உதவியாக வருகிறான் இராவணன். அப்போது, அவன் சீதையைக் காண்கிறான். வனதேவதையின் யோசனையின்படி சங்கு ஊதி இராமனைச் சீதையை விட்டுப்பிரியச்செய்து, சீதையை சிறைப்படுத்தி இலங்கைக்கு எடுத்துச் செல்கிறான். பிறகு இராம இராவண யுத்தம் நடக்கிறது, அதுபோது சீதை தன் உடன் பிறந்தவள் என்ற செய்தி தெரிந்து பிரபாமண்டலன் இராமனுக்குத்துணை நிற்கிறான் சுக்ரீவன். அனுமான் எனும் வேந்தர்களும் துணை நிற்கின்றனர். இராவணன் கொல்லப்பட்டு சீதை சிறை மீட்கப்படுகிறாள், இராமன் பிறகு அயோத்தி திரும்பி முடி சூட்டிக்கொள்ளுகிறான் என்ற விதமாக முடிகிறது பம்ப இராமாயணம். விபீஷணனை முதலிலே வீரனாகச்சிரித்துக்காட்டுகிறார் பம்பன். நடந்த தொல்லைகளில் நடுவேநாரதரைக்கொண்டு வந்துநிறுத்துகிறார் பம்ப ராமாயணத்தின் போக்கின்படி பார்த்தால் இராம இராவணர் விஷயம் பலவிதத்திலே இன்று பாராயணம் செய்யப்படும் கம்ப இராமாயணத்துக்கு மாறாக இருப்பதையறியலாம். இன்னமும் வேறு வேறுவிதமாக இராமாயணங்கள் உண்டு.

இப்படிப் பலரால் பலவிதமாக புனைந்துரைக்கப் பட்ட ஒரு கதையைத்தான், நற்கதிக்கு ஏடு என்றும் நடு வீட்டுப்பூஜைக்கு உகந்ததென்றும், நமது புண்ணிய சரிதமென்றும் கூறுகிறார்கள், ஆராய்ச்சி உலகம் அறிந்தும் அறியாதாராக இருப்பவரைக்கண்டு எள்ளி நகையாடாதிருக்குமா. எனவே இதைப் படித்து இராமாயணச் சுருக்கத்தைப் படித்து சிந்தித்துக்கூறுமின்!

இஃது "திராவிடநாடு" 22—10—44-ல் பிரசுரிக்கப்பட்டதை திரும்ப புத்தகரூபமாய் பிரசுரிக்கிறோம். சுயமரியாதைக் கழகம். குடந்தை.

அதன் மறுபதிப்பு.

உங்களிடம் தி பாங்க் ஆப் திராவிடநாடு

செக் ரசீது இருக்கிறதா?

அந்த நம்பரை மட்டில் பத்திரம் செய்து வையுங்கள்.

எங்கள் ஏஜண்டிடம் தலைப்பக்கார்டு மூன்றின்

விலை அணா 0-1-0 தான்.

அச் செக்கின் ரசீது அதிர்ஷ்ட நம்பர், பாங்கில் சீல்

செய்யப்பட்டது தந்தியான [illegible] னும் அளிக்கப்படும்.

இதன் பேர்வழி விலாசம்

"தென்னிந்தியா முஸ்லிம் லீக் எழுச்சி"

என்ற புத்தகத்தில் விளம்பரம் செய்யப்படும்.

இங்ஙனம்,

அஜீஸ் பதிப்பகம்,

97819

தனலெட்சுமி பிரஸ், விஜயபுரம். For A. P. H.

TE 125 Cs 500 1- 3—47

இரும்புப்பெட்டியில் ஏராளப் பணம்

வைத்திருந்தாலும்,

வாழ்க்கையில் அழகு கொடுப்பது

ஆடைகள் அல்லவா?

★ **பவர்லைட் சோப்பை** ★

வாங்கி உபயோகியுங்கள்.

ரஸாயன முறைப்படி பாய்லரில் தயாரித்தது.

213
10-68

உயர்ந்த தயாரிப்பு! சிறந்த குணம்!

TRADE MARK.

ஸ்ரீ ராமச்சந்திர விலாஸ் சிவபுரி புகையிலை.

★

இதனை உபயோகிக்கும்
ஆயிரக்கணக்கோர்
இதன் மேன்மையை பாராட்டி
இதையே தொடர்ந்து உபயோகித்து வருகின்றனர்.

★ இதையே உபயோகிக்கும்படி ★
பலரையும் சிபார்சு செய்கின்றனர்.

★ எங்கும் ஏஜண்டுகள் தேவை ★

தயாரிக்குமிடம் :—

ஸ்ரீ ராமச்சந்திர விலாஸ்,
சிவபுரி புகையிலை கம்பெனி
ஐநூற்றுபிள்ளையார் கோவில் தெரு விஜயபுரம் P.O.
திருவாரூர்.

"கூழானாலும் குளித்து குடி"
"கந்தையானாலும் கசக்கிக்கட்டு"
"சுத்தமே சுகம் தரும்" என்பதற்கிணங்க

சக்தி சோப்பைக்கொண்டு

★ சலவை செய்யுங்கள். ★

★ சலவைக்கு சிறந்தது ★

"சக்தி சோப்பு"

ருசியான சமையல் பதார்த்தங்களுக்கும்,
ஸ்நானம் செய்வதற்கும்

சக்தி மார்க்

நல்லெண்ணெ மிகச்சிறந்தது.

அப்பழுக்கற்ற சுத்தமான தயாரிப்பு.

சக்தி விலாஸ் & Co.,

சோப்பு ஒர்க்ஸ் & எண்ணெ மண்டி,

கீழராஜவீதி — தஞ்சாவூர்.

நீங்கள் உபயோகித்ததுண்டா ?

☞ இல்லாவிடில் உடனேபரீக்ஷியுங்கள்.

"ஜெயராம்" காயசுத்தி லேகியம்.

★ இரண்டே வேளையில் குணம். ஆச்சரிய மருந்து ★

பல நூற்றுக்கணக்கான குடும்பங்களில் தினம்உபயோகிப்பது

தலைவலி, மயக்கம், வாந்தி, நெஞ்சுவலி, முதுகுவலி, புளித்தேப்பம், நெஞ்செரிச்சல் அஜீர்ணம், வயிற்றுப்பிசம், வயிற்றுவலி, இடுப்புவலி, கைகால்வலி, கிறுமிகளின் உபாதை, நாள்பட்ட மலச்சிக்கல், குடல் வாதம், இருமல், நெரிக்கட்டி சுரம், மூலநோய், இவைகளை நீக்கி பசியைக் கொடுக்கும்.

1 சேர் ரூ. 4—0—0 ½ சேர் ரூ. 2—2—0

தயாரிக்குமிடம்:—

ஜெயராம் வைத்தியசாலை,

28, காசிவிஸ்வனாதர் கீழவீதி, கும்பகோணம்.

(நற்சான்று)

மாரிகுப்பம்,
K. G. F.
31—12—45.

அன்புநிறைந்த ஐயா அவர்களுக்கு வணக்கம், தங்களுடைய **"காயசுத்தி லேகியம்"** மகா சக்திவாய்ந்தது. அதன் பெருமை தின்றவர்களுக்குத்தான் தெரியும் சுணங்காமல் 1-சேர் உடனே அனுப்பிவைக்கவும்.

(Sd) P. K. PAUL.

விளம்பரம்.

எம்மிடம் அழகிய கலரில் எல்லா அரசியல் தலைவர்களின் படங்களும், பேட்ஜ்களும் குறைந்தசார்ஜில் கிடைக்கும். வியாபாரிகளுக்கும், எஜண்டுகளுக்கும் தக்க லாபம் கிடைக்கும். மாதிரி வேண்டுவோர் 5-ரூபாய் அனுப்பி பெற்றுக்கொள்ளலாம்.

1 ஜனாப் ஜின்னா
2 ,, நவாப்ஜாதா லியாகத்அலிகான்
3 ,, அப்துற்றப் நிஷ்டார்
4 ,, கஸ்னபர் அலிகான்
5 ,, அப்துல்மத்தீன் சுந்திரீகர்
6 திரு. ஜே. என். மண்டல்
7 ,, டாக்டர் அம்பேத்கார்
8 ,, N. சிவராஜ்
9 ,, ராஜ்போஸ்
10 ,, பெரியார் ஈ. வெ. ரா.
11 ,, C. N. அண்ணாதுரை
12 ,, அன்பழகன்
13 ,, நெடுஞ்செழியன்
14 ,, டார்பிடோ ஜனார்த்தனம்
15 ,, காந்தியார்
16 ,, சுபாஸ்சந்திரபோஸ்
17 ,, ஜவஹர்லால் நேரு
18 ,, லால் ஆஸாத்
19 ,, காமராஜ்
20 இடைக்கால சர்க்கார் உறுப்பினர்கள்
21 சென்னை மாகாண மந்திரிகள்

விபரங்களுக்கு:—

V. பெரியசாமி, பாண்டியன் டெயிலரிங் ஹவுஸ்,

சகினாபாய்சௌ தாரவி, பாம்பே 17.

ஒரிஜினல்

ரோஹிணி ஸ்பெஷல் வைரங்கள

மிகவும் ஜொலிப்புள்ளவை

ரிஜிஸ்டர் நெ.
124830

தொழிற்சாலை:—ரெங்கூன்.

கியாரண்டி பவுன் கெட்டி டிம்பியில் தயார்செய்

கல் பதித்த நகைகள் கிடைக்கும்.

வெளியூர் ஆர்டர்களை உடனுக்குடன் கவனிக்கப்படு

விபரங்களுக்கு: **லாயல் ஸ்டார் வைரங்க**

19, ஜாபர்ஸா தெரு, திருச்சி.

Wraper printed at the Tyagaraja Press, Vijayapuram. Cs.500